அசிதிசி விதுமக பாடசாலை படைப்பாக்க போட்டி - திரைக்கதை போட்டி / குறும்திரைப்பட போட்டி

திரைக்கதை பிரதி எழுதுவதற்கான வழிகாட்டுதல்கள்

1. தலைப்பு (Title): கதையின் கருப்பொருளைச் சிறப்பாகப் பிரதிபலிக்கும் தெளிவான மற்றும் அர்த்தமுள்ள தலைப்பாக இருக்க வேண்டும்.

2. தொனிப்பொருள் மற்றும் தகவல் (Theme and Message)

- திரைக்கதை போட்டியின் தொனிப்பொருளுடன் சிறப்பாக பொருந்த வேண்டும். அதன் மூலம் தெளிவான மற்றும் அர்த்தமுள்ள தகவல் சமூகத்திற்குச் சென்றடைய வேண்டும்.
- இந்தச் தகவல், மிகைப்படுத்தப்பட்ட வர்ணனைகள் அல்லது அறிவுரைகள் (அறிவுரை கூறும் பாங்கு) மூலம் அமையாமல், கதை ஊடாக இயல்பாக வெளிப்பட வேண்டும்.

3. சுயத்தன்மை / படைப்பாற்றல் (Originality)

- கதை கட்டாயம் போட்டியாளரின் சொந்தப் படைப்பாக்கமாக இருக்க வேண்டும்.
- இது வேறொரு படைப்பாக்கத்தின் பதிப்புரிமையை மீறுவதாகவோ அல்லது திருடப்பட்டதாகவோ இருக்கக் கூடாது.
- ஆக்கப்பூர்வமான மற்றும் புதுமையான கருத்துக்களை முன்வைப்பது ஊக்குவிக்கப்படும்.

4. கதைக் கட்டமைப்பு (Story Structure): ஒரு முழுமையான கதை பொதுவாக பின்வரும் அடிப்படைக் கூறுகளைக் கொண்டிருக்கும்:

அறிமுகம் (பின்னணி மற்றும் கதாபாத்திரங்கள்)

- ஆரம்ப நிகழ்வு (கதை தொடங்குவதற்குக் காரணமான நிகழ்வு)
- முரண்பாடு / உச்சக்கட்டத்தை நோக்கிய நகர்வு (Rising action/conflict)
- உச்சக்கட்டம் (Climax)
- தீர்வு அல்லது முடிவு (Resolution or conclusion)
- 10-15 நிமிட குறும்படமாக இருந்தாலும், கதைக்குத் தெளிவான ஆரம்பம், நடுப்பகுதி மற்றும் முடிவு இருக்க வேண்டும்.

5. கதாபாத்திரங்கள் (Characters)

- கதைக்குத் தேவையான மற்றும் பொருத்தமான கதாபாத்திரங்களாக இருக்க வேண்டும்.
- அவர்களின் செயற்பாடுகளும் உரையாடல்களும், அவர்களின் ஆளுமைக்கு இணங்க அமைந்திருக்க வேண்டும்.
- தேவையற்ற கதாபாத்திரங்களை உள்ளடக்குவதைத் தவிர்ப்பது நல்லது.

6. உரையாடல்கள் (Dialogue)

- இயல்பானதாகவும் யதார்த்தமானதாகவும் இருக்க வேண்டும்.
- சுருக்கமானதாகவும் (சிறிய) நோக்கமுடையதாகவும் இருக்க வேண்டும்.
- பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.
- நீண்ட உரையாடல்கள் மற்றும் தேவையற்ற விளக்கங்களைத் தவிர்ப்பது நல்லது.

7. காட்சி வழி கதைசொல்லல் கலை (Visual Storytelling):

- சினிமா என்பது ஒரு காட்சி ஊடகம் என்பதால், திரைக்கதை மூலம் வார்த்தைகளால் விவரிப்பதற்குப் பதிலாக காட்சியாகக் காட்ட வேண்டும் (Show rather than tell).
- செயற்பாடுகள் மற்றும் காட்சி குறிப்புகள் (Visual cues) உள்ளடக்கப்பட வேண்டும்.
- உரையாடல்கள் மிகவும் அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்..
- பின்னணிக் தளங்கள், முகபாவனைகள் மற்றும் காட்சி கூறுகளை திறம்பட பயன்படுத்த வேண்டும்.

8. காட்சிகளைப் பிரித்தல் (Scene Breakdown): ஒவ்வொரு காட்சியிலும் பின்வரும் கூறுகள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்:

- காட்சி எண்
- இடம்
- நேரம் (பகல் / இரவு)
- செயற்பாடுகள் பற்றிய சுருக்கமான விபரிப்பு
- உரையாடல்கள்
- முக்கியமான ஒலி பயன்பாடுகள் அல்லது காட்சி செயற்பாடுகள் (தேவையான இடங்களில்)

உதாரணம்:

காட்சி 3 - பாடசாலை நூலகம் - பகல்
அமல் மெதுவாக ஒரு பழைய குறிப்புப் புத்தகத்தை மேசை மீது வைக்கிறான். நதீஷா அதற்குள் இருக்கும் ஒரு புகைப்படத்தைப் பார்க்கிறாள்.

நதீஷா: "உனக்கு இது எங்கிருந்து கிடைத்தது?"

அமல் பதிலளிக்காமல் சிரிக்கிறான்.

9. நடைமுறைச் சாத்தியப்பாடு (Feasibility): திரைக்கதை பாடசாலை மாணவர்கள் நடைமுறையில் தயாரிக்கக்கூடிய மட்டத்தில் இருக்க வேண்டும். பின்வருவன தேவைப்படும் வகையில் திரைக்கதை எழுதுவதைத் தவிர்க்கவும்:

- அதிக செலவு ஏற்படும் காட்சி விளைவுகள் (Visual effects)
- அதிக எண்ணிக்கையிலான இடங்கள் (Locations)
- பெருமளவிலான நடிகர், நடிகையர் பட்டாளம்
- ஆபத்தை ஏற்படுத்தம் காட்சி (Stunts)
- சிக்கலான உபகரணங்கள்

10. பொருத்தமான மொழி மற்றும் உள்ளடக்கம் (Appropriate Language and Content)

- கதைகளுக்கும் நிகழ்வுகளுக்கும் பொருத்தமான மொழி பயன்படுத்தப்பட வேண்டும்
- வெறுப்புப் பேச்சுக்கள், பாகுபாடுகள், ஆபாச வார்த்தைகள் மற்றும் ஆபாசமான உள்ளடக்கங்கள் அற்றதாக இருக்க வேண்டும்.
- வன்முறை, போதைப்பொருள் பயன்பாடு அல்லது தீங்கு விளைவிக்கும் நடத்தைகளை ஊக்குவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- கலாச்சார ரீதியாக உணர்திறன் மிக்கதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும் (Inclusive) இருக்க வேண்டும்.

11. உணர்வுபூர்வமான தாக்கம் (Emotional Impact): கதை பார்வையாளர்களை உணர்வுபூர்வமாகக் கவர வேண்டும். அதற்கு பின்வரும் விடயங்கள் உதவியாக அமையும்.

- நெருங்கக்கூடிய / யதார்த்தபூர்வமான கதாபாத்திரங்கள்
- அர்த்தமுள்ள முரண்பாடுகள்
- உண்மையான உணர்வுகள்
- திருப்திகரமான ஒரு முடிவு

12. தொழில்நுட்ப திரைக்கதை வடிவம் (Technical Script Format): திரைக்கதையில் பின்வருபவை உள்ளடக்கப்பட வேண்டும்:

- தலைப்புப் பக்கம் (Title page)
- கதாபாத்திரப் பட்டியல் (Character list)
- காட்சித் தலைப்புகள்(Scene headings)
- செயற்பாட்டு விபரிப்புகள் (Action descriptions)
- உரையாடல்கள்
- மிகவும் அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே கெமரா திசைகள் (தேவையற்ற தொழில்நுட்ப அறிவுறுத்தல் வழங்குவதனை தவிர்க்கவும்)

13. நீளம் (Length): அதிகபட்சம் 10-15 நிமிடப் படத்திற்கு சுமார் 10-15 பக்கங்கள் (இது ஒரு திட்டவட்டமான பக்க எல்லை அல்ல).

14. கல்வி மற்றும் சமூக பெறுமதி (Educational and Social Value): திரைக்கதைகள் மூலம் பின்வருவனவற்றைச் செய்ய ஊக்குவிக்கப்படுகிறது:

- நேர்மறையான விழுமியங்களை மேம்படுத்துதல்.
- விமர்சன சிந்தனை மற்றும் படைப்பாற்றலை ஊக்குவித்தல்.
- சமூகப் பொறுப்புணர்வு உணர்வை ஏற்படுத்துதல்.
- ஒற்றுமை, பன்முகத்தன்மை, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, புதுமை அல்லது பிற ஆக்கப்பூர்வமான கருப்பொருள்களை வளர்த்தெடுத்தல்.

குறும்படப் போட்டிக்கான வழிகாட்டுதல்கள்

குறும்படப் போட்டிக்கும் மேலே குறிப்பிட்டுள்ள திரைக்கதை எழுதுவதற்கான வழிகாட்டுதல்கள் அவ்வாறே பொருந்தும். அதற்கு மேலதிகமாக, பின்வரும் வழிகாட்டுதல்களும் குறும்படப் போட்டிக்குப் பொருந்துவதாக அமையும்.

1. பொதுவான தகைமைகள் (General Eligibility)

- குறும்படம் கண்டிப்பாக இந்தப் போட்டிக்காகவே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும்.
- ஒரு பாடசாலை சமர்ப்பிக்கக்கூடிய அதிகபட்ச படைப்பாக்கங்களின் எண்ணிக்கை இரண்டு (02) மட்டுமே.
- படம் முழுமையாகப் போட்டியில் பங்கேற்கும் பாடசாலை மாணவர்களாலேயே தயாரிக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் வழிகாட்டலையும் மேற்பார்வையையும் வழங்க முடியும், ஆனால் அவர்கள் படைப்பாற்றலுடன்கூடிய அல்லது தொழில்நுட்ப ரீதியான தயாரிப்புப் பணிகளைச் செய்யக்கூடாது.

- படம் ஒரு சுயாதீனமான (சொந்த) படைப்பாக இருக்க வேண்டும் மற்றும் இதற்கு முன் எந்தவொரு போட்டியிலும் சமர்ப்பிக்கப்படாத ஒன்றாக இருக்க வேண்டும்.
- தயாரிப்பில் ஈடுபடும் அனைவரும் பாடசாலை மாணவர்களாக இருக்க வேண்டும்.

2. படத்தின் கால அளவு (Duration): 10-15 நிமிடங்கள்.

3. மொழி (Language)

- படங்களை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் தயாரிக்கலாம்.
- சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் உள்ள உரையாடல்களுக்கு ஆங்கில மொழியில் உப தலைப்புக்கள் (Subtitles) சேர்க்கப்பட வேண்டும்.

4. மாதிரி (Format)

- குறும்படத்தை MOV அல்லது MP4 வடிவத்தில் சமர்ப்பிப்பது மிகவும் பொருத்தமானது.
- காட்சிகள் தெளிவாக இருக்க வேண்டும்.
- கிடைமட்ட காட்சி விகிதம் (Landscape Aspect Ratio) 16:9 ஆக இருப்பது மிகவும் பொருத்தமானது.
- ஒலிகள் தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

5. ஆரம்ப மற்றும் இறுதிப் பெயர்ப்பட்டியல் (Opening and Closing Credits):

படம் தொடங்கும் போது:

- படத்தின் தலைப்பு
- பாடசாலையின் பெயர்

படம் முடியும் போது:

- நடிகர்கள் (Cast)
- தயாரிப்புக் குழு (Crew)
- நன்றியுரை / பாராட்டு (இருந்தால் மட்டும்)

6. உள்ளடக்கம் பற்றிய வழிகாட்டுதல்கள (Content Guidelines) படத்தின் மூலம்:

- நேர்மறையான சமூக விழுமியங்கள் மேம்படுத்தப்பட வேண்டும்.
- கலாச்சார மற்றும் மதப் பன்முகத்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும்.
- இனம், இனம், மதம், பால்நிலை, இயலாமைக்குட்பட்டமை அல்லது பிற குணாதிசயங்களின் அடிப்படையிலான பாகுபாடுகளைத் தவிர்க்க வேண்டும்.
- வெறுப்புப் பேச்சுக்கள் அல்லது அவதூறான/அநாகரீகமான மொழிப் பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டும்.
- வெளிப்படையான வன்முறை, நிர்வாணம், பாலியல் உள்ளடக்கங்கள் அல்லது கொடூரமான காட்சிகளை உள்ளடக்குவதைத் தவிர்க்க வேண்டும்.

- மதுபானம், புகையிலை, போதைப்பொருள் அல்லது பிற தீங்கு விளைவிக்கும் பொருட்களை ஊக்குவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- அரசியல் கட்சிகளை ஊக்குவிப்பதையோ அல்லது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளிலோ ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.
- வர்த்தக விளம்பரங்கள் அல்லது தேவையற்ற முறையில் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்துவதைத் (Product placement) தவிர்க்க வேண்டும்.

7. தயாரிப்பு வழிகாட்டுதல்கள் (Production Guidelines):

படம் முழுமையாக ஒரு சுயாதீனமான (சொந்த) படைப்பாக இருக்க வேண்டும். பின்வருவனவற்றைப் பயன்படுத்தும் போது போட்டியாளர்களுக்கு அதன் பதிப்புரிமை இருக்க வேண்டும், அல்லது அதற்கான அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும்:

- இசை
- புகைப்படங்கள் / படங்கள்
- வீடியோ காட்சிகள (Video footage)
- கிரபிக்ஸ (Graphics)
- அனிமேஷன் (Animations)
- ஒலி பயன்பாடு (Sound effects)

அனுமதியின்றி பதிப்புரிமை (Copyright) பெற்ற பொருட்களைப் பயன்படுத்துவது போட்டியிலிருந்து நீக்கப்படுவதற்கு காரணமாக அமையலாம்.

8. செயற்கை நுண்ணறிவு பயன்பாடு (Artificial Intelligence / AI):

செயற்கை நுண்ணறிவு (AI) கருவிகளை தயாரிப்புக்கு முந்தைய (Pre-production) அல்லது தயாரிப்புக்குப் பிந்திய (Post-production) கட்டங்களில் உதவிக்கருவிகளாக மட்டுமே பயன்படுத்த முடியும் (உதாரணம்: உப தலைப்புக்கள் சேர்த்தல், தேவையற்ற ஒலிகளை நீக்கல் / Noise reduction, வர்ண ஒழுங்கமைப்பு / Color correction போன்றவற்றுக்காக).

9. பாதுகாப்பு (Safety): போட்டியாளர்கள் பின்வருவனவற்றைச் செய்யக்கூடாது:

- ஆபத்தான காட்சிகளை (Stunts) செய்தல்.
- துப்பாக்கிகள் அல்லது பிற ஆயுதங்களைக் கையாளுதல்.
- தங்களையோ அல்லது பிறரையோ ஆபத்தில் ஆழ்த்துதல்.
- பொது அல்லது தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல்.
- வனவிலங்குகளுக்கு இடையூறு விளைவித்தல்.
- சட்டங்கள் அல்லது பாடசாலை ஒழுங்குவிதிகளை மீறுதல்.

மாணவர்களின் பாதுகாப்பைப் பணயம் வைத்து எந்தவொரு படமும் தயாரிக்கப்படக் கூடாது

.

10. அந்தரங்கம் (Privacy): பின்வரும் இடங்கள் அல்லது நபர்களைப் படம்பிடிப்பதற்கு முன்பு போட்டியாளர்கள் உரிய அனுமதியைப் பெற வேண்டும். அதற்கான எந்தவொரு பொறுப்பையும் ஏற்பாட்டுக் குழு ஏற்காது:

- தனியார் சொத்துக்கள்
- பொதுமக்கள்
- பாடசாலைகள்
- அரச நிறுவனங்கள்
- பாதுகாக்கப்பட்ட / உணர்திறன் மிக்க இடங்கள்

11. சமர்ப்பிக்க வேண்டியவைகள் (Submission Requirements): ஒவ்வொரு படைப்பைச் சமர்ப்பிக்கும் போதும் பின்வருபவை உள்ளடக்கப்பட வேண்டும்:

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம்
- படத்திற்குரிய திரைக்கதை (Script)
- கதைச் சுருக்கம் (Synopsis)
- நடிகர்கள் மற்றும் தயாரிப்புக் குழுவினர் பட்டியல்
- பதிப்புரிமைப் பிரகடனம் (Copyright declaration) - இருந்தால் மட்டும்
- சம்மதப் படிவங்கள் (Consent forms) - இருந்தால் மட்டும்